Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.2 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | விவசாயம் |
| பெயர். | - | சந்திரன் | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | கோபால் | சமயம் | - | |
| கிராமம் | - | முகையூர் | வயது | - | 65 |

04.07.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முகையூரில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சண்டை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் காலை வேலைக்கு சென்றால் இரவு 08.00 மணிக்கு தான் வருவேன். நான் சண்டையை நேரில் பார்க்கவில்லை. போலீசார் விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரியதில் அனுமதி வழங்கப்பட்டு சாட்சி அரசு தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.)**

1. கடந்த 30.10.2015 ம் தேதி மாலை 06.30 மணியளவில் நான் எங்கள் தெருவில் நின்றிருந்தேன் என்றாலும், அப்போது எதிரிகள் அ.சா.1 ஐ அசிங்கமாக பேசினார்கள் என்றாலும், அப்போதுஎதிரி மாணிக்கம் அ.சா.1 ன் கையை பிடித்து முறுக்கினார் என்றாலும், எதிரி அம்பிகா அ.சா.1 ன் கண்ணத்தில் அறைந்தார் என்றாலும், எதிரி மஉறாலட்சுமி அ.சா.1 ன் கையை முறுக்கினார் என்றாலும், எதிரி பிரவீனா என்பவர் அ.சா.1 ஐ எட்டி உதைத்தார் என்றாலும், பின்பு எதிரிகள் அவரை பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றாலும் சரியல்ல. மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்துவிட்டு, போலீசார்

விசாரணையிலும் தெரிவித்துவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக சென்றுவிட்டதால் அவர்களை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 151/2024

2025-ம் ஆண்டு ஜுலை மாதம் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா.3 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 3 | தொழில் | - | லைன் இன்ஸ்பெக்டர் (ஓய்வு) |
| பெயர். | - | சக்கரை | வட்டம் | - | கண்டாச்சிபுரம் |
| த/பெ. | | பாவாடை | சமயம் | - | |
| கிராமம் | - | முகையூர் | வயது | - | 65 |

04.07.2025

1 முதல் 3 எதிரிகள் ஆஜர்

**முதல் விசாரணை.**

1. நான் தற்போது முகையூரில் வசித்து லைன் இன்ஸ்பெக்டராக பணிபுரிந்து 2018 ல் பணி ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு காலை 11.30 மணியளவில் போலீசார் சண்டை வழக்கு சம்மந்தமாக தெய்வீகன் வீட்டருகே போலீசார் வந்து விசாரணை செய்தததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தனர். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆகும்.** போலீசார் விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நான் கையெழுத்திட்ட பேப்பரில் எழுதியிருந்ததா, வெள்ளை பேப்பரா என்றால் எழுதியிருந்தது. அதில் என்ன எழுதியிருந்தது என்று போலீசார் என்னிடம் படித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. நான் கையெழுத்து போடும் போது என்னுடன் வேறு

யாராவது இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, நான் கையெழுத்து போட்டு போய்விட்டேன்.

2. யார் என்னிடம் கையெழுத்து வாங்கியது என்றால் சாட்சி முதலில் இன்ஸ்பெக்டர் தான் என்று சொல்லிவிட்டு , போலீசார் தான் இன்ஸ்பெக்டரா, எஸ்.ஐ யா என்று தெரியாது என்று சொல்கிறார். சம்பவ நடந்த இடத்திற்கு அருகில் எனக்கு வீடு இல்லை என்றால் சரிதான், நான் வேற தெரு. போலீசார் சாட்சியாக இருக்க சொல்லி கேட்டுக்கொண்டதன் பேரில் கையெழுத்துபோட்டேனா என்றால் சாட்சியாக இல்லை, வந்து போனதற்காக கையெழுத்து போட்டேன். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்றால் இல்லை.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.